# சிலப்பதிகாரத்தில் அறவாழ்வை எடுத்துரைப்பதில் கவுந்தியடிகளின் வகிபாகம்

**தருமராசா அஜந்தகுமார்**
விரிவுரையாளர்
தமிழ்த்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**ஆய்வுச்சுருக்கம்**

சிலப்பதிகாரம் பெண்ணை முதன்மைப்படுத்தும் காப்பியங்களில் ஒன்றாகும். கண்ணகி மட்டுமல்லாமல் பல்வேறு சமூக வாழ்நிலை வேறுபாடுகளைக் கொண்ட துணைப்பாத்திரங்கள் காவியத்தின் செல்நெறிக்கு செழுமை சேர்க்கின்றனர். அந்தவகையில் நாடுகாண்காதைமுதல் அடைக்கலகாதை வரையான ஆறுகாதைகளில் இடம்பெறும் சமணப்பெண் துறவியான கவுந்தியடிகள் சிலப்பதிகாரக்கதைப்போக்கில் பெறும் வகிபாகத்தையும் அவரின் முக்கியத்து வத்தையும் காவியத்தின் வழி கண்டடைவதே இந்த ஆய்வின் நோக்கமாகும். சமணகாவியம் என்று சொல்லப்படுவதற்கு ஏதுவான சமணக்கருத்துகளை எடுத்துரைப்பதுதான் கவுந்தியடிகளின் பாத்திரவார்ப்பு நோக்கமா? கண்ணகியின் ஆளுமையில் செல்வாக்குச் செலுத்துதல்தான் நோக்கமா? என்ற ஆய்வு வினாக்களுக்கான தேடலாக இந்த ஆய்வு அமைகின்றது. பாசம்கெடுக கவுந்தி என்ற வாக்கின் பின்னும் கண்ணகி மீதான பாசத்தையும் பற்றையும் துறக்காத அவரது இயல்பையும் அறச்சீற்றத்தை கண்ணகிக்கு முப்பதுநாட்கள் உடனிருந்து பழகிய இயல்பால் தொற்றவைத்த பாங்கும் என்று அவரது ஆளுமையையும் மதிப்பிடுவதாக இந்த ஆய்வு அமைகின்றது. ஆய்விற்கு விவரணமுறையியலே பெரிதும் பயன்பட்டுள்ளது.

திறவுச்சொற்கள் : சமணம், பெண், அறச்சீற்றம், கண்ணகி, சிலப்பதிகாரம்

## அறிமுகம்

குடிமக்கள் காப்பியம், முத்தமிழ்க்காப்பியம் என்றெல்லாம் போற்றப்படும் சிலப்பதிகாரம், வணிகக்காப்பியம், சமணக்காப்பியம் என்றும் அரசியல், சமய முகங்களைப் பெறுகின்றது. "அடிகள் நீரே அருளுக" என்று சீத்தலைச்சாத்தனாரால் கூறப்பட இளங்கோவடிகளால் எழுதப்பட்ட நெஞ்சையள்ளும் இந்தக்காப்பியம் அரச உயர்குடியில் இருந்த பெண்ணின் கற்புத்திறத்தையும், சேற்றிலே பிறந்த தாமரையாய்ச் சுடர்விட்ட கணிகையர் குடிப்பிறந்த மாதவியின் கற்புத்திறத்தையும், வணிகக்குடியில் பிறந்து அடங்கியே வாழ்ந்த ஒரு பெண்ணின் கோபக்கனல்மூண்ட கற்பின் ஆற்றலையும் வெவ்வேறு கோணங்களில் நின்று வெளிப்படுத்துகின்றது. அற இலக்கியங்களில் பெரும்பாலானவை பெண்களை நோக்கி அறவாழ்வினையும் அறத்தத்துவங்களையும் ஓயாது "திருவாய் மலர்ந்தருளி"க் கொண்டிருந்த சூழலில் பெண்களால் எழுப்பப்பட்ட கூட்டுக்குரல்களால் இளங்கோவடிகளின் காவியம் புதுப்பொலிவு பெற்றது. சிலப்பதிகாரத்தில் கோவலனே காப்பிய நாயகனாயினும் அக்காப்பியத்தை நகர்த்திச்

செல்லும் பிரதான பாத்திரங்களும் துணைப்பாத்திரங்களும் பெண்களாகவே காணப்படுவதால் தமிழர் பண்பாட்டு வரலாற்றில் பெண்ணின் வகிபாகத்தைப் புரிந்தும் தெரிந்தும் கொள்வதற்கான பெருந்துணையாகச் சிலப்பதிகாரம் மிளிர்வதைக் காணலாம். கலை எழுச்சியில் மாத்திரமல்லாமல் கருத்தியல் ரீதியிலும் பல புதுமைகளின் நிலைக்களனாய்ச் சிலப்பதிகாரம் விளங்கியது. கண்ணகி, மாதவி, கோப்பெருந்தேவி ஆகியோர் இல்வாழ்வின் அனுபவங்களில் இருந்து சுடர்ந்து கொள்ள, தமிழிலக்கியச் சூழலில் முதன் முதல் சமணப் பெண்துறவியாக கவுந்தி அடிகளை இளங்கோவடிகள் அறிமுகம் செய்கிறார். "தவவேலிக்கண் இருந்த கவுந்தியடிகள்"(நாடுகாண்காதை, சிலப்பதிகாரம், அடியார்க்கு நல்லாருரை, 44) என்று அடியார்க்கு நல்லார் இவரை சிறப்பிக்கின்றார்.

**தமிழகத்தில் சமணசமயம்**

சமண சமயத்தைப் பின்பற்றிய வடநாட்டு வணிகர்களின் வழியாகவே பாண்டிய நாட்டின் தலைநகரான மதுரையைச் சூழ்ந்த பகுதிகளில் சமணம் நிலைபெற்றிருக்க வேண்டும் என்று வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றார்கள்.(வேதாசலம்,வெ, சிலப்பதி காரத்தில் பண்பாட்டுக் கோலங்கள்:12) கி.பி மூன்றாம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் சமணசமயம் காணப்பட்டமைக்கு மதுரையைச் சுற்றியுள்ள இடங்களில் கிடைக்கப் பெற்ற கல்வெட்டுகள் சான்று பகர்கின்றன. அக்கல்வெட்டுகள், மதுரையிலும் அதைச் சூழ்ந்த குன்றுப் பகுதிகளிலுமே முதன்முதலில் சமண சமயம் வேரூன்றியது என்பதை வெளிப்படுத்துகின்றன. சமணப்பள்ளிகள் பெரும்பாலும் மதுரை, உறையூர், காஞ்சிபுரம், திருக்கோயிலூர், கருவூர் ஆகிய சங்ககால அரசர்களின் தலைநகரங்களைச் சுற்றியமைந்த குன்றங்களிலேயே பெரும்பாலும் சமணப்பள்ளிகள் அமைந்திருந்தன.(அறத்துறை விளங்கிய அறவோர் பள்ளிகள்: ஊர்காண்காதை: சிலப்பதிகாரம்) பெருவழிகளில் பயணம் செய்யும் வணிகர்களும் வந்து செல்லக்கூடிய சந்திப்பிடத்திலேயே இவை அமைந்திருந்தன. வணிகர்களின் பாதுகாப்பான தங்குமிடமாகவும் இது அமைந் திருந்தது. அந்த நகரத்திற்கு வரும் ஏராளமான மக்களிடையே தங்கள் கருத்துகளைத் துறவிகள் பகிர்ந்து கொள்வதற்கான இடமாகவும் அவை அமைந்திருந்தன. அரசர்களும் வணிகர்களும் இன்னும் முக்கியஸ்தர்களுமே சமணப்பள்ளிகளின் உருவாக்கத்தில் துணைநின்றார்கள். மதுரைக்காஞ்சி மதுரை நகரின் சிறப்புகளையெல்லாம் எடுத்துக் கூறும் போதும் அவற்றில் ஒன்றாக சமணப்பள்ளியையும் குறிப்பிடுகின்றது. பெண்கள் தமது பிறப்பையும் பாசத்தையும் அறுப்பதற்கு ஆணாகப்பிறந்து அறநெறியை மேற்கொள்ளவேண்டும் என்று சமணர்கள் கருதினர். இப்பழைமைக்கொள்கைக்கு மாறாக அவர்கள் துறவுமேற்கொண்டால் இப்பிறவியிலேயே பாசத்தை அறுக்கும் நிலையை அடையலாம் என்ற புதுமையான கருத்தைச் சிலப்பதிகாரத்தில் கவுந்தி என்ற பாத்திரப்படைப்பின் மூலம் இளங்கோவடிகள் எடுத்துக்கூறுகின்றார். கவுந்தி, கந்தி என்ற சொற்கள் சமணப் பெண் துறவியரைக் குறிக்கும் சொற்களாகும். பெண் சமணப்பள்ளிகள் கவுந்திப் பள்ளி என்றும் அழைக்கப்படுகின்றது.

**கவுந்தியடிகள்**

சிலப்பதிகாரத்தின் நாடுகாண்காதைமுதல் அடைக்கலகாதை வரையான ஆறுகாதைகளில் இடம்பெறும் கவுந்தியடிகள் அறமும் ஆற்றலும் தவமும் மிக்க பெண்

துறவியாக விளங்குகின்றார். நீதிகேட்டுச் சென்ற கண்ணகியின் துணிவில் இவரது ஆளுமையும் ஒரு வகையில் செல்வாக்குச் செலுத்தியது எனலாம். இவரின் தவம், அறம், கோபம் என்பவற்றை அருகிருந்து பார்க்கக் கிடைத்த கண்ணகிக்கான துணிவும் வீரமும் துறவியான இவரிடம் இருந்தும் சுவறியிருக்க வாய்ப்புகள் அதிகம்.

**நாடுகாண் காதையில் கவுந்தியடிகள்**

கோவலனும் கண்ணகியும் வைகறை யாமத்தே யாரும் அறியாதபடி நகர்வாயிலைக்கடந்து காவிரியின் சங்க முகத்துறையையும் கழிந்து, வடகரை வழியாகச் சோலைகளின் ஊடே மேற்றிசை நோக்கிச்சென்று ஒரு காததூரம் கடந்து கவுந்தியடிகள் இருந்த இடத்தை அடைகின்றனர். நலவிசாரிப்புகளின் பின்னர் மதுரைநோக்கி அவர் களுடன் கவுந்தியடிகளும் செல்கின்றார். பல இடங்கள் தங்கித் தங்கிச் செல்கின்றனர். சீரங்கத்தை அடைந்து அங்குள்ள சோலைக்கண் வந்தெய்திய சாரணரைத் தொழுது அருகதேவனை வணங்குகின்றனர். ஓடம் ஒன்றில் ஏறி மூவரும் காவிரியின் தென்கரையை அடைந்து ஒரு பூஞ்சோலையில் இருந்தபோது ஒரு பரத்தையும் தூர்த்தனும் கண்ணகியை யும் கோவலனையும் பார்த்து அடாத வார்த்தைகளைக் கூறினர். சீற்றமடைந்த கவுந்தியடிகள் அவர்களை நரிகளாகும்படி சபிக்கின்றார். அறச்சீற்றம் உடையவராகவும், வழிகாட்டியாகவும் இயற்கைநலச் சிறப்புரைகளை எடுத்துரைப்பவராகவும் உறுதவம் உடையவராகவும் இங்கு கவுந்தியடிகள் காட்டப்படுகின்றார்.

பாடகச் சீறடி பரற்பகை யுழவா
காடிடை யிட்ட நாடுநீர் கழிதற்கு
அரிதிவள் செவ்வி

என்று கூறும் அளவிற்கு பரிவும் அக்கறையும் பெண்மையின் இயல்பைப் போற்றும் தன்மை பொருந்தியவராகவும் கவுந்தி அடிகள் காட்டப்படுகின்றார். அதைத்தாண்டி ஊழின் மீதும் அவர் அதிக நம்பிக்கை கொண்டிருந்தார் என்பதை "அறிகுநர் யாரோ" என்ற அடிகளில் உணர்த்துகின்றார்.

"அடிகள்! நீரே அருளுதிர் ஆயின். இத்
தொடி வளைத் தோளி துயர் தீர்த்தேன்

என்ற கோவலனின் கூற்றில் கவுந்தி அடிகளின் தவ ஆற்றலின் அருள் இருந்தால் கண்ணகிதுயர் தீர்ந்துவிடும் என்ற நம்பிக்கை வெளிப்படுகின்றது..

மதுரைக்குச் செல்லும் வழியில் உள்ள இடர்களை வரிசைப்படுத்தும் விதமும் தானும் துணையாய் வர இசையும் குணமும் கவுந்தி அடிகள் என்ற பெண்துறவியின் மீது ஒரு வித மதிப்பை உருவாக்குகின்றது. அவரின் தோற்றத்தையும் இறைநம்பிக்கையும் இளங் கோவடிகள் அழகாகச் சித்திரித்துள்ளார்.

தோமறு கடிஞையுஞ் சுவன்மே லறுவையும்
காவுந்தி யையைகைப் பீலியுங் கொண்டு

மொழிப்பொருட் டெய்வம் வழித்துணை யாகெனப்
பழிப்பருஞ் சிறப்பின் வழிப்படர் புரிந்தோர்

சாரணர் தோன்றி அக்கவுந்தி அடிகளை நோக்கி,

கழிபெருஞ்சிறப்பின் கவுந்தி காணாய்:

ஒழிக என ஒழியாது ஊட்டும் வல்வினை
இட்ட வித்தின் எதிர்வந்தெய்தி
ஒட்டுங்காலை ஒழிக்கவும் ஒண்ணா:
கடுங்கான் நெடுவெளி இடுஞ்சுடர் என்ன
ஒருங்குடன் நில்லா உடம்பிடை யுயிர்கள்

என்று கூறி, அருகனுடைய மாண்புகள் பலவற்றையும் எடுத்துரைக்கின்றனர். அவற்றைக் கேட்டதும் கவுந்தி அடிகள் கூறுவனவற்றால் அவர் தன்னுடைய சமயமெய்ப் பொருளின்பால் கொண்டிருந்த திண்ணிய பற்று விளங்குகின்றது

ஒரு மூன்றவித்தோன் ஓதிய ஞானத்
திருமொழி கல்லதென் செவியகம் திறவா:
காமனை வென்றோன் ஆயிரத் தெட்டு
நாமமல்லது நவிலாது என்நா:
ஐவரை வென்றோன் அடியிணை அல்லது
கைவரைக் காணினும் காணா என் கண்:
அருளறம் பூண்டோன் திருமெய்க்கல்லது என்
பொருளில் யாக்கை பூமியில் பொருந்தாது:
அருகர் அறவன் அறிவோர்க்கல்லதென்
இருகையும் கூடி ஒருவழிக் குவியா:
மலர்மிசை நடந்தோன் மலரடி யல்லது
என் தலைமிசை யுச்சி தான் அணிப்பொறாஅது:
இறுதியில் இன்பத் திறைமொழிக் கல்லது
மறுதர ஓதி என் மனம் புடைபெயராது

காமனும் தேவியும் போலும் இருக்கின்ற இவர்கள் யாரென்று பரத்தையும் அவளுடன் வந்தவனும் வினாவ, "மக்கள் காணீர்" என்று கவுந்தி அடிகள் பதிலுரைத்தமைக்கு "உடன் வயிற்றோர்கள் ஒருங்குடன் வாழ்க்கை கடவதுமுண்டோ கற்றறிந்தீரென" எள்ளலாகக் கூற, அவ்வார்த்தைகள் கண்ணகியை நடுங்க வைக்க - "எள்ளுநர் போலுமிவர் என் பூங்கோதையை முள்ளுடைக் காட்டில் முதுநரியாகென" தவந்தரு ஆற்றலால் சபிக்கின்றார். கண்ணகியினதும் கோவலனதும் வேண்டுதலுக்கு இணங்க சாபவிமோசனம் வழங்குகின்றார். இவையெல்லாம் அவருடைய ஆற்றலையும் இரக்கத்தையும் ஒருங்கே வெளிப்படுத்துகின்றன.

**காடுகாண் காதையில் கவுந்தியடிகள்**

சாரணர் கூறியதன்படி அருகதேவனை கவுந்தியடிகள் நன்மொழி கூறி வணங்குகின்றார். இங்கு கவுந்தியடிகளை இளங்கோவடிகள் "மாதவத்தாட்டி" என்று குறிப்பிடுகின்றார். மறையோன் ஒருவனைச் சந்திக்கின்ற போது அவன் பாண்டியனதும் திருமாலதும் பெருமையை கூறுகின்றான். இங்கு தனது சமயத்தின் உறுதிக்கருத்தை மிகத் தெளிவாக எடுத்துரைக்கும் கவுந்தியடிகளின் ஆளுமையைக் காண்கின்றோம்.

ஊரிடை இட்ட காடு பல கடந்தால்

ஆரிடை யுண்டோர் ஆரஞர்த் தெய்வம்
நடுக்கஞ்சாரா நயத்தின் தோன்றி
இடுக்கண் செய்யா தியங்குநர்த் தாங்கும்
மடுத்துடன் கிடக்கும் மதுரைப் பெருவழி
நீள்நிலம் கடந்த நெடுமுடி அண்ணல்
தாள் தொழுதகையேன் போகுவல் யானென(காடுகாண் காதை)

என்று மாமுது மறையோன் கூற, அவருக்குக் கவுந்தி அடிகள் சொல்லும் பதில் முக்கியமானது. திருமாலை வணங்குவதைப் பற்றி மறையோன் கூற வினைக்கொள்கை பற்றிய தனது கருத்தை தனது சமயத்தின் வழிநின்று கவுந்தி அடிகள் எடுத்துரைக்கின்றார். சமய விவாதத்தில் ஒரு பெண் ஆளுமையாய் கவுந்தி அடிகள் விளங்கியிருப்பதைச் சிறுகாட்சியில் பதிவுசெய்கின்றார்

நலம்புரிகொள்கை நான்மறையாள
பிலம்புகவேண்டும் பெற்றி ஈங்கில்லை
கப்பத்திந்திரன் காட்டிய நூலின்
மெய்ப்பாட்டியற்கையின் விளங்கக் காணாய்
இறந்தபிறப்பின் எய்திய வெல்லாம்
பிறந்த பிறப்பிற் காணாயோ நீ
வாய்மையின் வழாது மன்னுயிர் ஓம்புநர்க்கு
யாவது முண்டோ எய்தா அரும்பொருள்(காடுகாண்காதை)

இளங்கோவடிகள். நலம்புரி கொள்கை நான்மறையாள என்ற அவரது விளிப்பை இகழ்ச்சி என்று ந.மு,வேங்கடசாமி நாட்டாரின் உரை பதிவுசெய்வதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (வேங்கடசாமி நாட்டார், ந,மு,காடுகாண்காதை: 270)

புறஞ்சேரி இறுத்த காதையில் கவுந்தி அடிகள் "புண்ணிய முதல்வி" என்று குறிப்பிடப்படுகின்றார்.

**ஊர்காண் காதையில் கவுந்தி அடிகள்**

மதுரைக்கு வந்து சேர்ந்ததும் கோவலன் கவுந்தி அடிகளிடம் வந்து தனது துன்பநிலையை ஒளிவுமறைவின்றி எடுத்துக்கூறி, மதுரைக்குச் சென்று வணிகர்களைச் சந்தித்து தனது நிலையை எடுத்துரைத்து வரும்வரைக்கும் தங்கள் பாதுகாப்பில் கண்ணகியை வைத்திருங்கள் என்று கூறுகின்றார். அதற்குக் கவுந்தி அடிகள் கோவலனின் தவறான நடத்தையை மிக நாகரிமாக இடித்துரைத்ததுடன் அறவாழ்வின் மகிமையையும் பெண்களுக்கு வசமாகின்றவர்களின் துயர்நிலையையும் துறவிகளின் மேண்மையையும் எடுத்துக்கூறுகின்றார். அதுமட்டுமன்றி விதியின் உறுதியான நிலைமையையும் கூறி கண்ணகியைத் தனது பாதுகாப்பில் வைத்திருக்க உடன்படுகின்றார்.

தியானத்தில் இருந்த கவுந்தி அடிகள் என்பது தவம் மிக்கவர் என்பதை உணர்த்துகின்றது. அவரை வணங்குதல் என்பது இரண்டு பெண்களுடன் தொடர்பு பட்டிருந்த ஒருவன் ஒரு பெண் துறவியை வணங்குவதும் பணிந்து நிற்பதும் மாதவத்தை உடையவர்க்குக் கொடுக்கும் மாண்பினை உணர்த்துகின்றது. அதுமட்டுமல்லாமல் நெறியின் நீங்கிய இயல்புடையவன் ஆகி கண்ணகியின் வாட்டத்துக்கும் காரணமாகி பல இடங்களுக்கும் இவ்வாறு அலைந்து திரியும் சிறுமையை அடைந்துவிட்டேன் என்று

தனது குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை கவுந்தி அடிகளிடம் ஒப்பிப்பது இவ்விடத்தில் முக்கியமானது.

அவனின் துன்பத்திற்கான காரணங்களை நினைவுபடுத்துகின்றார் கவுந்தி அடிகள். அக்கருத்துகள் அவன் அறவாழ்வில் இருந்து நீங்கியமைக்கான கண்டனங் களாகவே அமைகின்றன. பாவச்செயல்களில் இருந்து நீங்குங்கள் அது துன்பத்தைத் தரும் என்று அறத்துறை சார்ந்த பெரியோர் வாய் ஓயாமல் கூறினாலும் மனதிலே உறுதியற்ற மக்கள் அதனைக் கொள்ளமாட்டார்கள் என்று கூறுகின்றார். இங்கு மனதில் உறுதியற்ற ஒருவனாய் கோவலனைச் சித்திரிக்கின்றார் கவுந்தி அடிகள்.

கவுந்தியடிகள் தானும் பெண்ணாக இருந்துகொண்டு சமண சமயத்தின் கொள்கையை எடுத்துக் கூறுகின்றார். பெண்களுடனான காதல் வாழ்க்கை துன்பத்தையே உண்டாக்கும். துறவிகளாய் வாழ்வதே மேன்மையானது என்ற கருத்தையும் உறுதியாக எடுத்துரைக்கின்றார்.

பிரிதல் துன்பமும் புணர்தல் துன்பமும்
உருவிலாளன் ஒறுக்கும் துன்பமும்
புரிகுழல் மாதர்ப் புணர்ந்தோர்க்கு அல்லது
ஒருதனி வாழ்க்கை உரவோர்க்கு இல்லை(ஊர்காண் காதை)

பெண்களையும் உணவையும் இன்பமெனக் கொண்டவர்கள் தாங்கமுடியாத துன்பத்தையே அனுபவிப்பார்கள் என்றும் காமத்தை அடிப்படையாகக் கொண்ட காதலினால் துன்பத்தை அடைவது இன்று நேற்றல்ல பன்னெடுங்காலமாக நடைபெற்றுவருகின்றது. கடவுளோ அரசனோ சாதாரண மனிதர்களோ இதற்கு விதி விலக்குக் கிடையாது என்று இராமன், நளன் ஆகியோரைச் சான்றுரைக்கின்றார். தன் முன்னால் உள்ள கோவலனின் மனதைத் தேற்றும் உள ஆற்றுப்படுத்துநராகி அவர்கள் எல்லோரும் மனைவியைப் பிரிந்தார்கள். நீ பிரியாத வாழ்க்கையைப் பெற்றிருக்கின்றாய் என்று ஆறுதல் கூறும் விதம் அவரின் ஆளுமைக்குச் சான்றாகின்றது.

**அடைக்கலகாதையில் கவுந்தி அடிகள்**

கண்ணகிக்குப் பாதுகாப்பாக பல நாட்கள் இருக்கமுடியாது என்பதால் அவளை மாதரி என்பவளிடம் அடைக்கலமாக ஒப்படைக்க முடிவுசெய்கின்றார் கவுந்தி அடிகள்.

ஆகாத்து ஓம்பி ஆப்பயன் அளிக்கும்
கோவலர் வாழ்க்கையோர் கொடும்பாடில்லை
தீதிலண் முதுமகள் செவ்விய லளியள்
மாதரி தன்னுடன் மடந்தையை இருத்துதற்
கேதமின்றென ...எண்ணினளாகி...(அடைக்கலகாதை)

மாதரியிடம் கண்ணகியை ஒப்படைத்து அவளைத் தாயாக இருந்து தாங்குக என்று கூறுவதுடன்

கற்புக்கடம் பூண்ட இத்தெய்வம் அல்லது
பொற்புடைத்தெய்வம் யாங்கண்டிலமால்
வானம் பொய்யாது வளம்பிழைப் பறியாது
நீணில வேந்தர் கொற்றஞ் சிதையாது

பத்தினிப் பெண்டிர் இருந்த நாடென்னும்

அத்தகு நல்லூரை அறியாயோ நீ (அடைக்கலகாதை)

இவ்வண்ணம் கண்ணகிபால் பேரன்புசெலுத்திய கவுந்தியடிகள் கோவலன் கொலையுண்டதும் பிறவும் கேட்டு உண்ணா நோன்பிருந்து உயிர்ப்பதி பெயர்க் கின்றனர். (துரைசாமிப்பிள்ளை, சு, ஔவை, முப்பெருங்காவியங்களில் ஒன்றான சிலப்பதிகார ஆராய்ச்சி, 72) என்ற கருத்து கவுந்தியடிகள் பற்றற்றவராக விளங்கினாலும் கண்ணகி என்ற பாத்திரத்தில் - பெண்மையின் துன்பத்தில் அவர் அடைந்த துன்பத்தையும் பற்றையும் வெளிப்படுத்துகின்றது.

**கண்ணகியும் கவுந்தியடிகளும்**

ஒரு இலக்கியத்தில் ஒரு சொல் கூட தேவையற்று இடம்பெறக் கூடாது என்பார்கள். அவ்வாறான இறுக்கமான சூழலில் ஒரு பாத்திரம் தேவையற்று அமைய முடியாது. கவுந்தியடிகளை சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் அமைப்பதற்கு அவரிடத்தில் தேவையான நியாயமான காரணங்கள் இருந்திருக்கும். கவுந்தியடிகள் இல்லாமல் சிலப்பதிகாரக் காவியக்கதை நகர்ந்திருக்க முடியாதா? என்ற அறிவார்த்தமான வினாவை எழுப்பும்போதே சில சிந்தனைகள் எம்மனதில் வேர்கொள்ளும்.

- கவுந்தியடிகளும் கண்ணகியும் சந்தித்ததால் காவியத்தில் ஏற்பட்ட மாற்றம் என்ன?
- கவுந்தியடிகளைச் சந்தித்தது கண்ணகியிடம் ஏதாவது குணநல மாற்றங்களை ஏற்படுத்தியதா?

கற்பின் கொழுந்தே பொற்பின் செல்வி என்று கோவலனால் பாராட்டப் பட்டவள் கண்ணகி.

கற்புக்கடம் பூண்ட இத்தெய்வம் அல்லது

பொற்புடைத் தெய்வம் யாம் கண்டிலமால் (அடைக்கலகாதை, 143.144)

என்று கவுந்தி அடிகளும் சிறப்பிக்கின்றார்.

புனமயிற் சாயற்கும்

என்று வனசாயினி கூறுகின்றாள்.

இவளோ

கொங்கச் செல்வி குடமலையாட்டி

தென்தமிழ்ப்பாவை செய்தவக் கொழுந்து

ஒரு மாமணியாய் உலகிற்கு ஓங்கிய பெருமாமணி (வேட்டுவவரி, 47 -50)

என்று சாலினி கூறுகின்றாள்.

இவ்வாறெல்லாம் பதுமையாய்க் கூறப்பட்ட கண்ணகி வழக்குரை காதையில் ஆவேசத்தின் அடையாளமாய் ரௌத்திரத்தின் திருவுருவாய் பாண்டியன் சபைக்கு நீதி கேட்கச் செல்கின்றாள். சூரியனைப் பார்த்து கேட்ட கேள்வியும் கிடைத்த அசரீரிப் பதிலும் அறச்சீற்றத்தை உருவாக்க, மதுரையை எரிக்கும் கோபக்கனல் அவளுள் இருந்து தகித்தது. மாதவியிடம் கோவலன் சென்ற போது வராத கோபம் எப்படித் திடீரென்று வந்தது? கவுந்தியடிகள் வம்பப் பரத்தையரைப் பார்த்து சபித்ததில் வெளிப்பட்ட அந்தக்

கோபக்கனலை கண்ணகியின் உள்ளம் பழகியிருக்கின்றது. அறத்தையும் சீற்றத்தையும் ஆத்மார்த்தமாக கனல வைப்பதற்கு கவுந்தியடிகளுடனான அருகிருப்பு உதவியிருக் கின்றது. ஏறத்தாழ முப்பது நாட்கள் கண்ணகியுடன் இணைபிரியாது கவுந்தி பழகியுள்ளார்(சண்முகம்பிள்ளை, மு, கவுந்தியடிகள்) அந்தச் சேர்க்கை பவந்தரு பாசம் கவுந்தி கெடுக என்ற சாரணர் மொழியையும் மீறி கண்ணகியிடம் ஏற்படுகின்றது. "என்னோடிவர் வினை உருத்ததோ" என்று கண்ணகிக்கு ஏற்பட்ட துயருக்குத் தானும் காரணமாய் உணர்ந்து உண்ணா நோன்பிருந்து உயிர்துறக்கின்றார். ஒரு கற்புடைப் பெண்ணிடத்து அவர் கொண்ட அன்பை வெளிப்படுத்த கவுந்தியடிகள் பயன்படு கின்றார். "அருளறம் பூண்டோன் திருமெய்க்கல்லது என் பொருளில் யாக்கை பூமியிற் பொருந்தாது" என்றெல்லாம் சாரணர் முன்பு சபதமிட்டவர் சமணக் கொள்கையை விட கண்ணகியிடத்தே பற்றுக்கொள்கின்றார். மதத்தைவிட மானிட நேசத்தை உணர்த்தவே கவுந்திஅடிகள் வழி இளங்கோவடிகள் விழைந்துள்ளார்.

## முடிவுரை

சமணப் பெண்துறவியாகிய கவுந்தி அடிகள் சமண சமயத்தின் மீது மாறாத ஈடுபாடுகொண்டிருந்தார். கோவலனின் செயல்களை மறைமுகமாகக் கண்டிப்பதிலும் சோலையிலே கோவலனையும் கண்ணகியையும் பழித்துரைத்தவர்களுக்குக் கொடுக்கும் சாபத்திலும் அறச்சீற்றம் கொண்டவராகவும் கண்ணகியின் துன்பத்திற்காய் தன்னுயிரை ஈந்ததில் மானுடத்தின் மாறாத உயர் இயல்பைக் கொண்டவராகவும் வெளிப்படுகின்றார். கவுந்தியடிகளின் இயல்புகள் கண்ணகியிடம் சுவறி அறச்சீற்றத்தின் உருவமாய் அவர் வெளிப்பட்டு இறுதியில் தெய்வநிலைக்கு சென்றுவிடுகின்றார்.

## உசாத்துணை நூல்கள்


1. அய்யப்பன். கா.(2009). சிலப்பதிகாரம் பன்முக வாசிப்பு. மாற்று வெளியீடு
2. அறிவுநம்பி. அ.(2017). கோட்பாட்டியல் நோக்கில் சிலப்பதிகாரம். நியூசெஞ்சரி புக்ஹவுஸ்
3. சிலப்பதிகாரம். (1959) மூலமும் உரையும். வேங்கடசாமி நாட்டார். ந.ம., திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்.
4. துரைசாமிப்பிள்ளை. சு. ஔவை(1942). முப்பெரும்காவியங்களில் ஒன்றான சிலப்பதிகார ஆராய்ச்சி. திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்.
5. பெருமாள்சாமி. வெ(2008). சிலப்பதிகாரம் மறக்கப்பட்ட நீதியும் மறைக்கப்பட்ட உண்மையும். பாரதி புத்த காலயம். சென்னை.
6. மனோன்மணி சண்முகதாஸ். செல்வஅம்பிகை நடராஜா(2009). சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம். யாழ்ப்பாணம்